தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006

ந.க.எண்.034785/எம் /E1/2025, நாள்.12/08/2025

பொருள்: பள்ளிக்கல்வி – கல்விசாரா மன்றச் செயல்பாடுகள் - அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் 2025-26 ஆகஸ்ட் மாதத்திற்கான சிறார் திரைப்படம் திரையிடுதல் - வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் சார்ந்து

பார்வை: தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், கடிதம் ந.க.எண். 034785/எம் 1/இ 1/2025, நாள் : 24/07/2025

******

உலகமெங்கும் திரைத்துறை வாயிலாக திரைப்படங்கள் ஏற்படுத்திய தாக்கங்களும் மாற்றங்களும் ஏராளம். திரைப்படங்களால் அறம் மற்றும் சமத்துவமற்ற கருத்துகளை, கலந்துரையாடல்களை பற்றி எளிதான வகையில் மாணவர்களுக்கு புரிதலை ஏற்படுத்திவிட முடியும்.

மாணவர்களுக்கு சமூக நீதி, சமத்துவம், அறிவியல் பார்வை ஆகியவற்றைப் பற்றின விழிப்புணர்வு மற்றும் அதன் மீதான பார்வையை ஏற்படுத்துவதற்கும், திரைப்படக் கலையை ரசிப்பதற்கும், கதை, திரைக்கதை, நடிப்பு, உடையலங்காரம், பின்னணி வடிவமைப்பு, இசை, ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, இயக்கம் மற்றும் தயாரிப்பு போன்ற திறனை வளர்க்கும் நோக்கத்துடன் மாதந்தோறும் அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் திரையிடல்கள் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வித்துறையின் முன்னெடுப்புகளில் அனைவராலும் பாராட்டப்பட்டவற்றுள் மிகவும் முக்கியமானது திரைப்படங்களை பள்ளிகளில் திரையிட்ட நிகழ்வு.

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி, சென்ற ஆண்டை தொடர்ந்து 2025- 2026 ஆம் கல்வியாண்டில், அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 வகுப்பு வரை பயின்று வரும் மாணவர்கள் கண்டுணரும் வகையில் ஆகஸ்ட் மாதம் "தி ஒயிட் பலூன்- The White Balloon" திரைப்படமானது திரையிடப்பட உள்ளது.

Scanned with OKEN Scanner

படத்தின் கதைக் கரு, சுருக்கம், குழந்தைகள் புரிந்துகொள்ள வேண்டியவை, உரையாடவேண்டியவை இணைப்பில் பகிரப்பட்டுள்ளது.

**வழிகாட்டு நெறிமுறைகள்:**

**திரையிடுவதற்கு முன்**

- மாநிலத்திலிருந்து TNSED செயலி வாயிலாக "தி ஒயிட் பலூன்- The White Balloon" திரைப்படம் பள்ளிகளுக்கு பகிரப்படும். திரையிடுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு இணைப்பு- 1 இல் பகிரப்பட்டுள்ள படத்தின் புகைப்படத்தை பள்ளியின் அறிவிப்புப் பலகையில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் கவனத்திற்கு வைக்க வேண்டும்.
- அப்பள்ளியைச் சார்ந்த SMC முன்னாள் மாணவ உறுப்பினர்களில் ஒருவரைத் திரையிடலுக்கான முன்னேற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைத்தலுக்கான பொறுப்பாளராகத் தலைமை ஆசிரியர் நியமிக்க வேண்டும்.
- அவர்கள் சிறார் திரைப்பட மன்ற பொறுப்பு ஆசிரியர் வழிகாட்டுதலின் படி திரையிடப்படவிருக்கும் படத்திற்கான முன்னேற்பாடுகளை செய்வர்.
- சிறார் திரைப்பட மன்ற பொறுப்பு ஆசிரியர் மற்றும் ஒருங்கிணைதலுக்கான பொறுப்பாளர்கள் திரையிடலுக்கு முன்பே படத்தைப் பார்த்து, அதன் பொருளை, முக்கியத்துவத்தை உணர்ந்து திரையிடலுக்கு தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- திரையிடப்படவிருக்கும் படத்தின் பிரதியைத் திரையிட்டு பார்த்து அதன் திரையிடும் தரத்தை உறுதிப்படுத்த வேண்டும்.
- திரையிடலுக்குத் தேவையான அறை மற்றும் கருவிகளின் தரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- திரையிடப்படும் அறை, திரையிடலுக்கு ஏதுவான ஒளி, ஒலி குறைவான, அமைதியான இடமாக இருக்க வேண்டும்.
- அந்த அறை காற்றோட்டமான, சுகாதாரமான, பாதுகாப்பான இடமாகவும் இருக்கவேண்டும்.

Scanned with OKEN Scanner

- ❖ படம் பார்க்கும் மாணவர்களுக்குப் போதுமான இருக்கை, குடிநீர், கழிப்பறை வசதிகள் ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

## திரையிடலின் போது

- ❖ பொறுப்பு ஆசிரியர் மற்றும் SMC உறுப்பினர் திரையிடலுக்கு முன்பு படத்தின் கரு, அதன் பின்னணி, அதைத் திரையிடுவதற்கான காரணம் போன்றவற்றை மாணவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும்.
- ❖ திரையிடப்படும் படம் தமிழ் அல்லாத பிறமொழியாக இருக்கும் வேளையில் அந்தப்படத்திற்கு நேரடி மற்றும் சுருக்கமான மொழிபெயர்ப்பைத் தலைமை ஆசிரியரோ, ஆசிரியரோ, பள்ளி மேலாண்மைக் குழுவிலுள்ள முன்னாள் மாணவரோ அல்லது பொது முன்னாள் மாணவரோ அல்லது எல்லோரும் இணைந்தோ செய்ய வேண்டும்.
- ❖ திரையிடப்படும் படத்தில் பணி புரிந்தவர்கள் பற்றிய குறிப்புகள் மற்றும் பிற செய்திகளை எழுத்து வடிவில் வரும்போது அதை முழுமையாகப் பார்க்கும்படி மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.
- ❖ குறிப்பாகப் படம் முழுமையாக முடியும் வரை விளக்குகளை அணைத்தே வைத்திருக்கவேண்டும்.

## திரையிட்ட பின்

- ❖ திரையிடலுக்குப் பிறகு மாணவர்களை மகிழ்முற்றம் மாணவர் குழுக்கள் (House systems 5 groups) வாரியாக பிரித்து 5-6 மாணவர்கள் கொண்ட சிறு குழுக்களாக பிரிக்க வேண்டும். (பெண், ஆண், திருநர், மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் என ஒருங்கிணைந்த குழுவாக இருப்பது அவசியம்).
- ❖ படத்தின் கதைக்கரு மற்றும் படத்திலிருந்து பெறப்பட்ட அனுபவத்தைப் பற்றிக் கலந்தாலோசித்து விவாதிக்க நேரம் கொடுக்கப்பட வேண்டும்.
- ❖ மாநிலத்திலிருந்து படம் சார்ந்து பகிரப்பட்ட கலந்துரையாடலுக்கான தலைப்புகள் அல்லது கேள்விகள், மாணவர் குழுக்களிடம் பகிரப்பட்டு உரையாடலை ஊக்குவிக்க வேண்டும்.

Scanned with OKEN Scanner

❖ அக்கேள்விகள் அப்படத்தின் கதைக்கரு, வடிவம், குறிப்பிட்ட காட்சிகள், தொழில்நுட்பக் குறிப்புகள், அந்தப்படம் கொடுத்த அனுபவம் மற்றும் செய்தி ஆகியவற்றை மையமாகக் கொண்டு இருக்கலாம்.

❖ கலந்துரையாடலின் கருத்து குறிப்புகளை ஒவ்வொரு குழுவும் முன் வந்து ஒலி வாங்கியைப் பயன்படுத்தி எல்லோருக்கும் பகிர ஊக்குவிக்கவேண்டும்.

❖ திரையிடலை ஒருங்கிணைக்கும் ஆசிரியர், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் கலந்துரையாடலில் பங்கேற்று விளக்கங்களை, மாணவர்கள் கவனிக்கத் தவறிய கூறுகளைப் பகிரலாம்.

❖ கலந்துரையாடலுக்கு உரிய முக்கியத்துவமும் போதுமான நேரமும் வழங்கப்படவேண்டும்.

**இணைப்பு:**

1. படத்தின் புகைப்படம்
2. படத்தின் கரு மற்றும் கதைச்சுருக்கம்
3. உரையாடலுக்கான கேள்விகள்
4. திரையிடலுக்கான நிரல்

5/5

**பள்ளிக் கல்வி இயக்குநர்**

12.08.25

**பெறுநர் :**

1. முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்


**நகல் :**

1. மாநில திட்ட இயக்குனர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை - 600006
2. இயக்குநர், தொடக்க கல்வி இயக்குநரகம், சென்னை- 600006

Scanned with OKEN Scanner

இணைப்பு 1:

படத்தின் பெயர்: "தி ஒயிட் பலூன்"




Scanned with OKEN Scanner

## இணைப்பு 2: படத்தின் கரு மற்றும் கதைச்சுருக்கம்

***The White Balloon***

படம் வெளியான ஆண்டு: (1995)

தி ஒயிட் பலூன் (The White balloon) திரைப்படமானது இயக்குநர் ஜாபர் பனாஹி இயக்கிய ஒரு ஈரானிய திரைப்படமாகும். இத்திரைப்படத்தின் எழுத்தாளர் ஈரானின் புகழ்பெற்ற இயக்குநர் மற்றும் திரைக்கதை ஆசிரியரான அப்பாஸ் கியாரோஸ்தாமி ஆவார்.

ஈரானிய புத்தாண்டுக்கு முந்தைய நாள்!

ரசீஹ்ம் அவளது தாயும் தெஹ்ரான் சந்தையில் புத்தாண்டிற்குத் தேவையான பொருட்கள் வாங்கச் செல்கின்றனர். ரசீஹ் ஒரு கடையில் தங்கமீனைப் பார்த்து, வீட்டில் உள்ள தன் வீட்டின் குளத்தில் இருக்கும் ஒல்லியான மீன்களை விடவும் அவை செதில்கள் அதிகம் உள்ளதால் அழகாக உள்ளதாகவும் எண்ணி தன் தாயிடம் வாங்கி தருமாறு கேட்கிறாள்.

வீட்டிற்குச் செல்லும் வழியில், பாம்பு வித்தை காண ஆண்கள் கூட்டம் கூடியிருக்கிறது. என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க ரசீஹ் விரும்புகிறாள், ஆனால் அவளுடைய தாய் அதை காண அனுமதிக்கவில்லை.

வீட்டிற்குத் திரும்பிய ரசீஹ் தனது தாயார் புதிய தங்கமீனை வாங்க அனுமதிக்க மறுத்ததால் வருத்தமடைந்தார். மேலும் தனது தாயைத் தொடர்ந்து வாங்கித்தருமாறு கேட்டுக்கொண்டே இருக்கிறாள். பின்பு தனது அண்ணனான அலியும் ரசீஹ்-ற்கு ஆதரவு தர, மீனை வாங்க அனுமதி பெற்றுவிட்டனர்.

தன் அம்மாவிடம் இருந்த கடைசி 500-டோமன் வாங்கிக் கொண்டு சிறு தொலைவில் உள்ள மீன் கடைக்கு காலி கண்ணாடி குடுவையுடன் ரசீஹ் புறப்படுகிறாள். அவள் செல்லும் வழியில்

Scanned with OKEN Scanner

சந்திக்கும் மனிதர்கள், இடர்பாடுகள் மற்றும் அதனை அவர்கள் கையாண்ட முறைகள் படத்தில் மிக எளிய நடையில் ஆழமான முறையில் விளக்கப்பட்டுள்ளது.

இத்திரைப்படம் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை, நிலைத்தன்மை, விடாமுயற்சி, சிக்கலை எதிர்கொள்வதின் முக்கியத்துவம் மற்றும் மனிதநேயத்தின் முக்கியத்துவத்தை விளக்குவதாக அமையும்.

## இணைப்பு 3: அனைத்து குழந்தைகளும் உரையாடுவதற்கான தலைப்பு/ கேள்விகள்:

1. நீங்கள் எப்போதாவது ரசீஹ் போன்ற ஒரு சூழ்நிலையை எதிர்கொண்டதுண்டா? அதை எப்படிக் கையாண்டீர்கள் என்று உங்கள் குழுவுடன் பகிருங்கள்
2. படத்தில் இருந்து நீங்கள் எடுத்த முக்கியமான பாடம் என்ன? இது ஏன் முக்கியமானது என்று நினைக்கிறீர்கள் என்று பகிர்ந்துகொள்ளுங்கள் .
3. தெரியாத ஒருவர் உங்களுக்குச் செய்த உதவியை நினைவு கூறி அப்பொழுது உங்களுக்கு ஏற்பட்ட உணர்வைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
4. திரைப்படத்தில் நீங்கள் மாற்ற விரும்பும் காட்சி என்ன? அதற்கான காரணத்தைக் குழுவுடன் பகிருங்கள்.
5. இத்திரைப்படத்தில் ஏதேனும் காட்சிகள்/ குறியீடுகள்/ பெயர்கள்/ செயல்கள்/ என விமர்சனங்கள் அல்லது பிடிக்கவில்லை எனில் அதை குறித்து உரையாடுங்கள்.

Scanned with OKEN Scanner

**இணைப்பு 4: திரையிடலுக்கான நிரல்:**

| வ. எண் | செயல்படுகள் | நடத்தக்கூடியவர் /உறுதிசெய்பவர் |
|---|---|---|
| 1 | திரைப்படத்தின் பிரதியை திரையிட்டுப் பார்த்து அதன் திரையிடும் தரத்தை உறுதிப்படுத்த வேண்டும் | பொறுப்பு ஆசிரியர் |
| 2 | படம் திரையிடுவதற்கான காற்றோட்டமான அறை, தண்ணீர் என அனைத்தையும் சரி பார்த்தல் | SMC உறுப்பினர் |
| 3 | திரைப்படம் திரையிடப்படும் அறையில் அனைத்து குழந்தைகளையும் கூட்ட வேண்டும் | வகுப்பு ஆசிரியர்கள் உதவியுடன் பொறுப்பு ஆசிரியர் |
| 4 | படத்தின் அறிமுகத்தை மாணவர்களிடம் பகிர்தல் (கதை மற்றும் கருவைப் பகிர்தலை தவிர்க்கவும்) | தலைமை ஆசிரியர் /பொறுப்பு ஆசிரியர் |
| 5 | படம் திரையிடல் | பொறுப்பு ஆசிரியர் |
| 6 | குழு அமர்வு<br><br>(மாநிலத்திலிருந்து பகிரப்பட்ட தலைப்புகளில் குழுக்களாக அனைத்து குழந்தைகளும் தங்களின் கருத்துக்களை அவர்களுக்குள் உரையாட ஊக்குவித்தல்) | பொறுப்பு ஆசிரியர் நெறியாளராக இருத்தல் |
| 7 | குழு பகிர்வு<br><br>(குழுவிற்கு 3 நிமிடங்கள் என முன்னின்று பகிர வாய்ப்பு கொடுத்தல்) | பொறுப்பு ஆசிரியர் நெறியாளராக இருத்தல் |
| 8 | பாராட்டுக்களும் நன்றி உரையும் | பொறுப்பு ஆசிரியர் அல்லது தலைமையாசிரியர் |

Scanned with OKEN Scanner